கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.62/2018**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 08.08.2024 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 08.08.2024 | சாட்சி | வா.சா.3 |
| பெயர் | அருள்மேரி | வயது.. | 45 |
| தந்தை பெயர்.. | சுந்தரமூர்த்தி | கிராமம்.. | மஞ்சக்கொள்ளை |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1,2,3 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை..**

**1.** குமாரசாமிக்கும் எனக்கும்என்ன உறவுமுறை என்றால் என் மாமனார். என் கணவர் சுந்தரமூர்த்தி குமாராசாமியின் மகன் என்றால் சரிதான். முத்துலட்சுமி குமாரசாமி மீது தாக்கல் செய்த வழக்கு பற்றி தெரியுமா என்றால் தெரியும். குமாரசாமி இறந்த பிறகு அவருடை வாரிசுகளாக என்னையும் எனது மகன்களையும் அந்த வழக்கில் தரப்பினராக சேர்த்தாரக்ள் என்றால் சரிதான், என் கணவர் சுந்தரமூர்த்தி என்றால் சரிதான். சுந்தரமூர்த்திக்கு நான், வள்ளுவதாஸ், பீட்டர் மற்றும் தான் வாரிசு தாரர்கள் என்றால் சரிதான். முத்துலட்சுமி தாக்கல் செய்த வழக்கில் வழக்கு சொத்து முத்துலட்சுமிக்கு தான் பாத்தியம் என்று தீர்ப்பானது என்றால் சரிதான்.

2. 03.03.2018 அன்று வழக்கு சொத்தை கோர்ட் அமினா மூலம் ஒப்புதல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். OS.129/2017 என்ற வழக்கை முத்துலட்சுமிக்கு எதிராக வள்ளுவதாசும், பீட்டர் மைனர் என்பதால் காப்பாளராக நானும் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். OS.129/2017 வழக்க தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் இல்லை மேல்முறையீடு செய்தோம்- மேல்முறையீட்டு எண். தெரியுமா என்றால் என் மகனுக்கு தெரியும் எனக்கு தெரியாது. தமிழ்மணி, ஜீவா ஆகியோரை எனக்கு தெரியுமா என்றால் எனது நாத்தனார் அம்சவள்ளியின் மகன்கள். குமாரசாமி அவருக்குண்டான சொத்தை பேரன்களான தமிழ்மணி மற்றும் ஜீவாவிற்கு 1992 ல் செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்றால் சரிதான்.

3. மாலதி யார் என்றால் எனது Co-sister சந்திராவின் மகள் மாலதி. ஜீவா, தமிழ்மணி செட்டில்மெண்ட் மூலம் கிடைத்த சொத்தை மாலதிக்கு கிரயம் கொடுத்துவிட்டனர் என்றால் சரிதான். அந்த கிரயம் உண்மையான கிரயம் இல்லை என்று

முத்துலட்சுமி தாக்கல் செய்த OS.168/2010 ல் தீர்ப்பாகிவிட்டது என்றால் சரிதான். நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் மஞ்சக்கொல்லையில். முத்துலட்சுமி வழக்கு சொத்தை ஒப்புதல் எடுத்து அனுபவத்தில் இருக்கும் நிலையில் மாலதியுடன் சேர்ந்துக்கொண்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து மாலதியுடை அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான்.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri,
Additional District Munsif
Chidambaram.